**மறுசீரமைப்பு கட்டமைப்பு**

**வாருங்கள் மறு பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்**

## மறுசீரமைப்பு கட்டமைப்புடன் தொழில் ஒப்பந்தங்களுக்கு மறுபேச்சுவார்த்தை செய்தல்

# பேச்சுவார்த்தை அறிவிப்பை பெறும்போது எதிர்பார்க்க வேண்டியவை




### 15 ஜனவரி முதல் 26 பிப்ரவரி 2021 வரை: நீங்கள் பேச்சுவார்த்தை அறிவிப்பைப் பெறக்கூடும் / பெறலாம்

பாதிப்புக்கு உள்ளான ஒரு தொழில் நிறுவனம், உங்களுடன் செய்த ஒப்பந்தத்திற்கு மறுபேச்சுவார்த்தை நடத்த விரும்பினால், இந்தக் காலகட்டத்தில் எப்போது வேண்டுமானாலும் பேச்சுவார்த்தை அறிவிப்பை உங்களுக்கு அனுப்பி வைக்கலாம்

- *பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் கட்டமைப்பின்கீழ் தகுதி பெறுவதை நிரூபிப்பதற்காக இணைத்துள்ள பத்திரங்களை (எ.கா. நிதிநிலை அறிக்கைகள்) நீங்கள் பார்வையிடலாம்*

### 4 வாரப் பேச்சுவார்த்தை காலகட்டம்: ஒப்பந்தத்திற்கு மறுபேச்சுவார்த்தை நடத்துங்கள்

பேச்சுவார்த்தை அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்டவுடன்:

- *உங்களுக்கும் பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனத்திற்கும் ஒப்பந்தத்திற்கு மறுபேச்சுவார்த்தை நடத்த நான்கு வாரங்கள் தரப்படும்*
- *ஒப்பந்தத் தரப்புகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கலந்து பேசி, ஒருவர் மற்றவரது நிலையைப் புரிந்துகொண்டு, இருதரப்புக்கும் ஏற்புடைய இணக்கத்தை அடைய முயற்சி செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, முன்னதாக ஆர்டர் செய்த பொருட்களின் விநியோகத்தை ரத்து செய்ய, அல்லது வாடகையைத் தற்காலிகமாகக் குறைக்க தரப்புகள் சம்மதிக்கலாம். தரப்புகள் பிரிவதே நல்லதென்றும் தீர்மானித்து, இரு தரப்புகளும் ஒப்புக்கொள்ளும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தை நிறுத்துவது சிறந்தது என்றும் தரப்புகள் முடிவு செய்யலாம்*
- *பேச்சுவார்த்தை அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டவுடன், ஒப்பந்தப்படி செய்யப்பட வேண்டிய எந்தவொரு பொறுப்பையும் பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் செய்யத் தவறினால், நீங்கள் அதற்கு எதிராகச் சட்டப்படியான நடவடிக்கைகளை (எ.கா. நீதிமன்ற வழக்குப்பதிவு) எடுக்க தடை செய்யப்பட்டுள்ளீர்கள்*

*மறுபேச்சுவார்த்தை நிறைவேறாவிட்டால்*

### 2 வார ஆட்சேபக் காலகட்டம்: நீங்கள் ஆட்சேபம் தெரிவிக்கலாம்

4 வார பேச்சுவார்த்தை காலகட்டம் முடிவடைந்த பிறகு, பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் கட்டமைப்பின்கீழ் தகுதி பெறுவதை நீங்கள் மறுத்தால், www.go.gov.sg/re-align-objection என்ற இணையத்தளத்தில் ஆட்சேப அறிக்கையைத் தாக்கல் செய்யலாம்

- *சுயேச்சை மதிப்பீட்டாளர்* ஒருவர், பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் தகுதி பெறுகிறதா என்பதையும், ஒப்பந்தம் ரத்தாகும் தேதியையும், ஒப்பந்தம் ரத்தாகும்போது தரப்புகளின்உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றையும் தீர்மானிப்பார்*

நீங்கள் பணச் சிரமத்தை எதிர்நோக்கும் ஒரு சிறிய நில உரிமையாளராக இருந்தால், www.go.gov.sg/re-align-compensation என்ற இணையத்தளத்தில் இழப்பீட்டுக்கான அறிக்கையை தாக்கல் செய்யலாம்

- *குத்தகை அல்லது உரிம ஒப்பந்தம் முன்கூட்டியே ரத்து செய்யப்பட்டால், வாடகைதாரரிடமிருந்து இழப்பீடு பெற நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதை மதிப்பீட்டாளர்* தீர்மானிப்பார்*

பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் தகுதி பெறுகிறதா என்பதை பற்றி தீர்மானம் வெளியிடப்படும் வரையில், ஒப்பந்தம் தொடர்ந்து நடப்பில் இருக்கும்

**நீங்கள் ஆட்சேப அறிக்கையைத் தாக்கல் செய்யாவிட்டால், 2 வார ஆட்சேபக் காலகட்டம் முடிவடைந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒப்பந்தம் ரத்தாகிவிட்டதாகக் கருதப்படும்**

- *ஒப்பந்தம் ரத்தாகும் தேதியில் எஞ்சியிருக்கும் கடன்களுக்கும் பொறுப்புகளுக்கும் பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் தொடர்ந்து பொறுப்பேற்கவேண்டும்*
- *பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம் முன்கூட்டியே ரத்து செய்வதற்கான அபராதமும் ஒப்பந்தம் ரத்தான தேதிக்குப் பிறகு எதிர்காலப் பொறுப்புகளுக்கும் பணம் செலுத்த வேண்டியதில்லை*

### சரியாக்கல் அறிக்கையைத் தாக்கல் செய்ய 2 வாரக் காலகட்டம்: அவசியமாயின், உரிமைகளையும் பொறுப்புகளையும் திருத்தியமைக்க கோரிக்கை செய்யுங்கள்

- *2 வார ஆட்சேபக் காலகட்டம் முடிவடைந்த பிறகு, ஒப்பந்தத்தை ரத்து செய்தவுடன் உங்களால் உரிமைகளையும் பொறுப்புகளையும் ஏற்க முடியாவிட்டால், ஒப்பந்தத்தின்கீழ் உரிமைகளிலும் பொறுப்புகளிலும் திருத்தங்கள் செய்வதன் தொடர்பில் தீர்மானம்* எடுக்க, நீங்கள் அல்லது பாதிப்புக்கு உள்ளான தொழில் நிறுவனம், மதிப்பீட்டாளரிடம் சரியாக்கல் அறிக்கையைத் தாக்கல் செய்யலாம்*

** மதிப்பீட்டாளர்களின் அனைத்து தீர்மானங்களும் இறுதியானவை, மற்றும் முறையீடு செய்ய முடியாதவை. சம்பந்தப்பட்ட தரப்புகள் விருப்பப்பட்டால் சட்ட ஆலோசனையைப் பெறலாம், ஆனால், தீர்மானங்களின் போது சட்டப் பிரதிநிதிப்பு அனுமதிக்கப்படாது*

MINISTRY OF LAW
SINGAPORE

**மேல் விவரம் அறிய, www.go.gov.sg/re-align என்ற இணையப்பக்கத்தை நாடுங்கள்**

2020-COVID-INFO7